Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.73/2020

Dated 01-04-2026
Deposition of witness for : PW 32

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | வயது | : | 55 |
| தந்தை பெயர் | : | செல்வம் | தாலுக்கா | : | நீடாமங்கலம் |
| கிராமம் | : | நீடாமங்கலம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**A2, 8absent 355 BNSS Petition filed and allowed. And other accused present**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் நடுகாவேரி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 12.06.2019 ம்தேதி நடுகாவேரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் பாலமுருகன்

என்பவர் சண்முகவேல் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று உள்ளார். புகார் வாக்குமூலத்தை பெற்று எதிரிகள் மீது நி.கு.எண்.,90/2019 சட்டப்பிரிவு 302 இ.த.ச ன் படியான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

3) அச்சமயம் ஆய்வாளராக பணிபுரிந்த திரு ஜெகதீசன் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தும், சான்று பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் ஆகியவற்றை கைப்பற்றியும் எதிரிகளை கைது செய்து வாக்குமூலம் பதிவு செய்தும் தடய பொருட்களை கைப்பற்றியும் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் .அவர் கடந்த 18.11.2025 அன்று பணியில் இருந்த சமயத்தில் இறந்துவிட்டார். அவருடன் நானும் பணியாற்றி இருக்கிறேன். அதனால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.

3) அதனால் அந்த கோப்பினை பார்த்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு கோப்பினை 12.06.2019 அன்று விசாரணைக்கு எடுத்துகொண்டு பகல் 13.30 மணிக்கு சம்பவ இடமான பனவெளி கிராமம் கீழ மாரியம்மன்கோவில் தெருவிற்கு எதிரே உள்ள வெட்டாற்று தென்கரையில் வைத்து சாட்சிகள் சுப்பிரமணியன், பெரியார்செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.18** அந்த வரைபடம் இதுதான். அது **அ.சா.ஆ. 19** ஆகும்.

4) பின்னர் சாட்சிகள் சண்முகவேல், ஜான்சன், பிரபு, ராஜேந்திரன், ஆறுமுகம்,

ரெங்கபாஷ்யம், முருகையன், சுப்பிரமணியன், பெரியார் செல்வம், ராமசந்திரன், கோபிநாத், கார்த்திக் ஆகியோர்களை விசாரித்து தனி தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பினனர் சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு, ரத்தம் தோயாத மண் சிறிதளவு ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு **சா.பொ.12** ஆகும். அந்த ரத்தம் தோயாத மண் சிறிதளவு **சா.பொ. 13** ஆகும். அதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.20** ஆகும்.

5) பின்னர் 13.6.2019 ம் தேதி இவ்வழக்கில் இறந்த நபரான பிரசாந்த் என்பவரது பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.21** ஆகும்.

6) பின்னர் சாட்சிகள் மலர்கொடி, பிரபாகரன், பிருந்தா, மணிகண்டன், மோகன்ராஜ், மலர்விழி, பாலாஜி, மதியழகன், கலைவாணன், பிரேமா ஆகியோர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 14.6.2019 ம் தேதி இவ்வழக்கின் எதிரிகள் 1வது எதிரி முருகராஜ், 2வது எதிரி சுரேந்திரன், 3வது எதிரி தினேஸ், 4வது எதிரி வெங்கடேஸ் ஆகியோர்களை சாட்சிகள் ராஜேந்திரன், சந்திரகாசன் ஆகியோர்கள் முன்னிலையில் கண்டியூர் பேருந்து நிலையத்தில் காலை 5.00 மணிக்கு கைது செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரிகளை விசாரித்தபோது எதிரி முருகராஜ் தானாக முன்

வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதில் என்னை அழைத்து சென்றால் நாங்கள் பிரசாந்தை அடித்து கொலை செய்த இடத்தையும் கொலைக்கு பயன்படுத்திய டிரன்ஸ்பார்மர் ஹேன்டில் இரும்பு பைப்பை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறியுள்ளார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.22** ஆகும்.

7) எதிரி சுரேந்திரன் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதில் என்னை அழைத்து சென்றால் நாங்கள் பிரசாந்தை அடித்து கொலை செய்த இடத்தையும் கொலைக்கு பயன்படுத்திய டிரன்ஸ்பார்மர் ஹேன்டில் இரும்பு பைப்பை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறியுள்ளார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.23** ஆகும்.

8) எதிரி தினேஸ் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதில் என்னை அழைத்து சென்றால் நாங்கள் பிரசாந்தை அடித்து கொலை செய்த இடத்தையும் கொலைக்கு பயன்படுத்திய டிரன்ஸ்பார்மர் ஹேன்டில் இரும்பு பைப்பை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறியுள்ளார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.24** ஆகும்.

9) எதிரி வெங்கடேசன் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதில் என்னை அழைத்து சென்றால் நாங்கள் பிரசாந்தை அடித்து கொலை செய்த இடத்தையும் கொலைக்கு பயன்படுத்திய டிரன்ஸ்பார்மர் ஹேன்டில் இரும்பு பைப்பை

மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறியுள்ளார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.25** ஆகும்.

10) பின்னர் அன்றே இவ்வழக்கின் சட்டப்பிரிவான 302 இ.த.ச. வினை 147,148, 294(பி), 302 உ/இ 120(பி), 109, 34 இ.த.ச. ன்படி சட்டப்பிரிவின்படி மாற்றம் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.26** ஆகும்.

11) பின்னர் மேற்படி எதிரிகள் மற்றும் சாட்சிகளுடன் திருவையாறு - கும்பகோணம் சாலை ஈச்சம்பட்டி அய்யனார் கோவில் காலணி அருகில் ரோட்டின் வடபுறம் உள்ள கரும்பு வயலில் இருந்து எதிரி சுரேந்திரன் எடுத்து ஆஜர் செய்த ரத்தகறை படிந்த இரும்பு பைப்பால் ஆன டிரான்ஸ்பார்மர் ஹேண்டில் மொத்தம் நீளம் 62 செ.மீ. இரும்பு பாகம் 54 செ.மீ. கவை போன்ற பாகம் 8 செ.மீ. கவைகளின் அகலம் 7 செ.மீ. பைப்பின் அகலம் 3-1/2 செ.மீ. இருந்தை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். அந்த இரும்பு பைப் இதுதான். அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான மகஜர் **அ.சா.ஆ.27** ஆகும்.

**மதிய உணவு இடைவேளைக்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

**மதிய உணவு இடைவேளைக்கு பிறகு முதல் விசாரணை தொடர்ச்சி**

12) அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு வழக்கின் எதிரி பாரதி என்பவரை திருவையாறு தேரடி பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்துள்ளார். அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி பாரதியை

விசாரணை செய்யும்போது அவர் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதை மேற்படி சாட்சிகள் முன்பு ஆய்வாளர் பதிவு செய்துள்ளார். அதில் என்னை அழைத்து சென்றால் மறைத்துவைத்திருக்கும் பிரசாந்தின் கொலைக்கு பயன்படுத்திய எனது காரை அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன் என்று கூறியுள்ளார். அதன்அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.28** ஆகும்.

13) அதன் படி எதிரியையும் சாட்சிகளையும் திருவையாறு மெர்சியா நகர், மாமனார் பிச்சை பிள்ளை வீட்டு வாசலுக்கு அழைத்து சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த TN 82 C 4871 TATA IDICA சில்வர் காரை மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். அந்த காருக்கான புகைப்படங்கள் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான கைப்பற்றுகை மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.29** ஆகும்.

14) அன்றைய தினமே 14.00 மணிக்கு திருப்பந்துருத்தி பஸ்ஸ்டாப்பில் வைத்து எதிரிகள் குமார், பார்த்திபன் ஆகியோர்களை ஆய்வாளர் கைது செய்துள்ளார். எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடய பொருட்களுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் ராஜேந்திரன், சந்திரகாசன், சுயம்பிரகாசம் , அமுதா, சாமிய்யா, செல்வம், சந்தியா அய்யப்பன், முருகானந்தம், சுரேஷ், ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் மலர்கொடி, பிரபாகரன், பிருந்தா ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

15) 15.6.2019 ம் தேதி சாட்சிகள் ரமேஷ்குமார், அம்பேத்குமார், கலியமூர்த்தி, சிலம்பரசன், பழனி, சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் நீதிமன்றத்தில் சரண் அடைந்த எதிரிகளான தங்கதுரை, சரவணன், பன்னீர்செல்வம், ஆகியோர்களை நீதிமன்ற

உத்தரவின் படி இரண்டு நாள் காவல்நிலைய காப்பில் எடுத்துள்ளார்.

16) பின்னர் 15.10.2019 ம்தேதி சாட்சிகள் சகானா, நாகராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தங்கதுரையை விசாரிக்க அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரி சரவணன் என்பவரை விசாரிக்க அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரி பன்னீர்செல்வம் என்பவரை விசாரிக்க அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார். சாட்சிகள் சகானா, நாகராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்துள்ளார்.

17) மேற்படி எதிரிகளை நீதிமன்றத்திற்கு தகுந்த வழிகாவல்மூலம் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் 16.10.2019 ம் தேதி நீதிமன்றத்தில் சரண் அடைந்த எதிரி தமிழ்செல்வனை இரண்டு நாட்கள் போலிஸ் காவலில் எடுத்து விசாரிக்க 17.10.2019 ம் தேதி சாட்சிகள் முருகானந்தம், மதியழகன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார்.

18) பின்னர் 30.10.2019 ம் தேதி சாட்சி ரவிச்சந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 4.11.2019 ம் தேதி வட்டார தடய அறிவியல் அலுவலர் டாக்டர் சிவகுமார் அவர்களை விசாரித்தும், வட்டார தடய அறிவியல் வல்லுநர் டாக்டர் சிவசங்கரி அவர்களை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். த.கா. சரவணன், ஜெய்சங்கர், உதவி ஆய்வாளர் பாலமுருகன் , மருத்துவர் தமிழ்மணி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். மருத்துவர் தமிழ்மணியை விசாரித்து இறந்த நபருக்கான பிரேத பரிசோதனைஅறிக்கை பெற்றுள்ளார்.

19) பின்னர் ஆய்வாளர் கைப்பற்றிய தடய பொருளான இரும்பு பைப்பை படிவம் 91 மூலம்

நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளார். அந்த படிவம் 91 இதுதான். அது **அ.சா.ஆ.30** ஆகும். பிரேதத்தின் மீது எடுக்கப்பட்ட துணிகள் மற்றும் கடுக்கன் ஒன்று தங்கத்தால் ஆனது. அது **சா.பொ.14** ஆகும். சில்வர் கலர் மோதிரம் ஒன்று அது **சா.பொ.15** ஆகும். பித்தளை மோதிரம் ஒன்று அது **சா.பொ.16** ஆகும். இவைகளை காவலர் தனி அறிக்கை மூலம் ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார், அந்த உடைமைகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.31** ஆகும். சம்பவ இடத்தில் இருந்து எடுத்த ரத்தம் தோய்ந்த மண், ரத்தம்தோயாத மண் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.32** ஆகும். கைப்பற்றிய காரை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.33** ஆகும்.

20) எதிரி தினேஷ், தங்கதுரை, பிரசாந்த் , சந்தியா ஆகிய நால்வரும் கடந்த 12.06.2019 அன்று TN 45 BK 5495 என்ற TATA IDICA வெள்ளை நிற காரில் வந்த இறங்கியதாக எதிரி தமிழ்செல்வன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் உள்ள விபரத்தின் அடிப்படையில் ஆய்வாளர் மேற்படி டோல்பிளாசா புராஜக்ட் இயக்குநர் திரு ரவிச்சந்திரன் என்பவரிடம் மேற்படி கார் சென்ற சி.சி.டி.வி. பதிவுகளை வேண்டுகோள் கடிதம் கொடுத்து கோரியதன் அடிப்படையில் 29.10.2019 அன்று மேற்படி இயக்குநர் சி.சி.டி.வி பதிவுகள் மற்றும் அறிக்கை கொடுத்துள்ளார். மேற்படி சி.சி.டி.வி பதிவுகள் மற்றும் அறிக்கையை சான்று ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுகோள் வைக்கப்பட்டது. ( **எதிரிகள்தரப்பில் 65(பி)**

**சான்றிதழ் இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டது. அதனால் இந்த ஆவணங்கள் சான்று ஆவணங்களாக குறியீடு செய்யப்படவில்லை)**

21) சான்று பொருட்களான இரும்பு பைப், ஜீன்ஸ் பேண்ட், ஜட்டி, பனியன், சட்டை, துண்டு மற்றும் மண் ஆகியவற்றை தடய அறிவியல் துறைக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து வரபெற்ற அறிக்கையை பெற்றுள்ளார். அந்த அறிக்கை **அ.சா.ஆ.34** ஆகும்.

22) பின்னர் மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் முருகராஜ், சுரேந்திரன், தினேஷ், வெங்கடேசன், தங்கதுரை, தமிழ்செல்வன், பாரதி , முகமது பிலால் என்கிற சரவணன், குமார், பார்த்திபன், பன்னீர்செல்வம், ஆகியோர்களுக்கு எதிராக இ-த.ச. பிரிவுகள் 302, 147, 148, 294(பி), 120(பி) 109, 149, 364, 323, 342 ன் படி இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

சாட்சிகள் அ.சா.4,5, 6, 7 மற்றும் 12 முதல் 17, அ.சா.19,20,21 ஆகியோர்கள் கு.வி.மு.ச. 161 வாக்குமூலத்தில் கூறியதுபோலவே ஆய்வாளர் விசாரணையின் போதும் சொல்லி உள்ளார்கள்.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் கடந்த 13 வருடங்களாக ஆய்வாளராக இருக்கிறேன்.

2) பொதுவாக மரணத்திற்கான காரணம் தெரியாத மற்றும் அடையாளம் தெரியாத பிணம் இருப்பதாக காவல் நிலையத்திற்கு புகார் வந்தால் முதலில் சந்தேக மரணம் என வழக்கு

பதிவு செய்வார்கள் என்றால் சரிதான்.

3) இந்த வழக்கில் புகார் கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் இந்த வழக்கின் எதிரிகளின் பெயரில் யாருடைய பெயரையும் குறிப்பிடாமல்தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4)இந்த வழக்கில் குறியீடப்பட்ட சான்று பொருட்களை இன்றுதான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரிதான்.

5) ஆவணங்களின் அடிப்படையில்தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

6) உண்மையான புலன் விசாரணை அதிகாரியான ஜெகதீசன் அவர்களிடம் யாரும் தாமாக முன்வந்து எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அவர் பதிவு செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில்தான் சொல்கிறேன் என்றும் சொன்னால் அவருடைய ஆவணத்தில் எதிரிகள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பதிவு செய்திருப்பதால் அந்த ஆய்வாளர் இறந்துவிட்டதால் அதை பார்த்து நான் கூறுகிறேன்.

7)இந்த வழக்கில் மோப்பநாய் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மோப்பநாய் எந்த எதிரிகளையும் தேடி போய் பிடிக்கவில்லை என்று அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8)சம்பவ இடம் என்பது ஆற்றின் கரை என்றால் சரிதான். வி.ஏ.ஓ. புகார் கொடுப்பதற்கு

முன்பாக 2, 3 நாட்களாக இறந்த நபரில் உடல் அந்த இடத்தில் கிடந்தது என்றால் தவறு.

9) முதலில் பிரேத்தை பார்த்தது வி.ஏ.ஒ, அல்லது மீனியலா என்றால் 12.6.2019 அன்று காலை 9.00 மணிக்கு பார்த்ததாக கிராம உதவியாளர் கிராம நிர்வாக அலுவலரிடம் சொல்லி இருக்கிறார்.

10) காவல் நிலையத்திற்கு புகார் காலை 11.00 மணிக்கு வந்துள்ளது. புகார் காலை 11 மணிக்கு காவல்நிலையத்திற்கு கொடுப்பதற்கு முன்பாக பிரேதம் கிடந்த இடத்தில் இருந்து பிரேதம் போலிசார் மூலம் ஆம்புலன்சில் எடுத்துசென்று தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமணை சவகிடங்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் அதை பற்றிய விபரங்கள் கோப்பில் இல்லை.

11) இறந்துபோன பிரசாந்த் மீது வேறு பல வழக்குகள் நிலுவையில் இருந்தது சம்பந்தமாக ஜெகதீசன் ஆய்வாளர் விசாரித்துள்ளாரா என்றால் அந்த விபரம் கோப்பில் இல்லை.

12) குறிப்பாக மைனர் பெண்களை இறந்துபோன பிரசாந்த் உயிருடன் இருந்தபோது காதலிப்பதுபோல் நடித்து அந்த பெண்களிடம் உடல்உறவு கொண்டுள்ளதாக கபிஸ்தலம், அய்யம்பேட்டை காவல்நிலையங்களில் புகார் பதிவாகியுள்ளது என்றால் அதுபற்றிய விபரங்கள் இந்த வழக்கு கோப்பில் இல்லை.

13) எதிரி முருகராஜ் அய்யம்பேட்டை காவல்நிலையத்தில் தனது இளைய மைனர் மகளை பிரசாந்த் கடத்தி சென்றுவிட்டதாக புகார் கொடுத்து இருக்கிறார் என்றால் இது சம்பந்தமாக ஆய்வாளர் ஜெகதீசன் அய்யம்பேட்டை காவல் உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்துள்ளார். சி.எஸ்.ஆர்.185/2019 பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த புகாரில் அந்த பெண்ணின் வயது 17 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14) ஆய்வாளர் ஜெகதீசன் எதிரிகளை வைத்து எந்த அடையாள அணி வகுப்பும் நடத்தவில்லை என்றால் சரிதான்.

15) பிரேதம் கிடந்த இடத்திற்கு அருகில் மேற்கு பக்கத்தில் நிறைய கடைகள், வீடுகள் இருக்கிறது என்றால் சரியல்ல.

16) அனைத்து தனி நபர் சாட்சிகளும் புகார்வாதிக்கு உறவினர்கள், நண்பர்கள், வேண்டியவர்கள் என்றால் சரியல்ல.

17) எதிரிகள் ஒருவர் கூட ஆய்வாளர் ஜெகதீசன் அவர்களிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல,.

18) மேற்படி ஆய்வாளர் ஜெகதீசன் தாமாக முன்வந்து கிடந்த பிரேதத்தின் மீது 302 இ.த.ச வழக்கு பதிவு செய்தது தவறு என்றாலும் கு.வி.மு.ச 174 தான் பதிவு செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

19) ஆவணத்தின் படி சட்ட மாறுதல் அறிக்கை செய்தது தவறு என்றால் சரியல்ல.

20) 7 வது எதிரி பாரதி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த காரும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல.

21) பொதுவாக ஒரு வழக்கில் இறந்த உடல் தனியாக கிடந்தால் உடனே 302 இ.த.ச வழக்கு பதிவு செய்யமுடியுமா என்றால் செய்யமுடியும்.

22) தவறாக இந்த எதிரிகளை இந்த வழக்கில் எதிரிகளாக எந்தவித முகாந்திரமும் இன்றி உண்மையை சரிவர விசாரிக்காமல் எடுத்த எடுப்பிலேயே கொலை குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

23) இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் சான்று பொருட்களை தாமாக எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

24) ஆய்வாளர் ஜெகதீசன் அவர்களுக்கு ஆதரவாக கோப்புகளை பார்த்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

25) சான்று பொருட்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.01 21:14:11 +0530